1971 டிசம்பர் 10]

துறையிலே உள்ளவர்கள் வசதி, செல்வாக்கு காரணமாக அரசாங்கத்தி னுடைய நிர்வாகத் துறைக்கு முழு அளவுக்கு ஒத்துழைப்புத் தருவதில்லை. அப்படிப்பட்ட ஒத்துழைப்பு பெற முயற்சிக்கப்படவில்லையானால், அரசாங்க விதிமுறைகளை ஏற்படுத்தி, முறைப்படி செயல்படுத்துவதற்கு எத்தனை இடங் கள் நிரப்பப்படவில்லை என்பதைத்திட்டவட்டமாக அறிவிக்க முடியும்.

திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மருந்தகங்கள்.

* 223வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த மருந்தகங்களை நடப்பு ஆண்டில் அரசு மேற்கொள்ளும் செயற்குறிப்பு பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இல்லை.

திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் நிதிநிலைமை பற்றுக்குறையாக இருக்கிறது. நிதி பற்றுக்குறை மிகுந்த திருப் பூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மருந்தகங்களை அரசாங்கம் மேற்கொள்ள முன் வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் நிதி பற்றுக்குறை நிலைமை இருந்து வருகிறது. அது திருப் பூருக்கு மட்டுமல்ல. மருந்தகங்களை அரசே மேற்கொள்ள வேண்டுமென்று வேண்டுகோள் விடுவது என்றால், எல்லா ஊராட்சி ஒன்றியங்களும் இப்படிச் செய்யலாம். கொள்கை என்பது வரவேற்கத்தக்கது. ஆனால் அதற்கான வசதி என்கிற அடிப்படை இல்லாததாகும்.

வடார்க்காடு மாவட்டத்தில் சீரணிப்பணி

* 224 வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டத்திற்கு சென்ற ஆண்டு (1970) எவ்வளவு தொகை சீரணிப் பணிக்காக சீரணி நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டது?

(இ) அதில் செலவழிக்கப்படாமல் தொகை ஏதேனும் திருப்பப்பட்டதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) சீரணிப் பணிக்காக வட ஆற்காடு மாவட்டத்திற்கு 1970-71-ல் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 1,26,000.

(இ) ஒதுக்கப்பட்ட தொகை முழுவதும் செலவழிக்கப்பட்டுவிட்டது.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட இந்தப் பணம் எந்தெந்த தாலுகாவுக்கு, எவ்வளவு எவ்வளவு செலவழிக்கப்பட்டது என்கிற புள்ளிவிவரத்தை அமைச்சர் அவர்கள் தரு வார்களா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, வட்டவாரியாக விவரம் இல்லை. ஆனால் மாவட்டம் முழுவதும் செய்துள்ள பணிகள், கட்டி முடிக்கப்பட்ட பள்ளிக் கட்டிடம் 48; இணைப்புச் சாலைகள் 2, கால்வாய், குளம் தூர் எடுத்தல் 1; திறந்தவெளி அரங்குகள் 5 ஆகும். இவைகளின் மதிப்பீடு

2,67,588 ரூபாய் ஆகும். ஆனல் அரசாங்கம் செலவழித்திருப்பது 1,23,577 ரூபாய் ஆகும். அதுமட்டுமல்ல, செய்யாற்றில் 'அண்ணு அருளகம்' என்ற கட்டிடம் பத்தாயிரம் ரூபாய் செலவில் இந்தச் சிரணி மூலம் கட்டி முடிக்கப் படும் தறுவாயில் இருக்கிறது.

முற்பகல் 9-30 திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திற்கு 1 லட்சத்து 26 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டதாகச் சொன்னர்கள். அது முழுவதும் செலவழிக்கப்பட்டதாகவும் அமைச்சர் அவர்கள் சொன்னர்கள். வட ஆற்காடு மாவட்டம் பெரிய மாவட்டம். அந்தப் பணம் போதவில்லை என்று கோரிக்கை வந்திருக்கிறதா? அப்படி வந்திருந்தால் அந்த மாவட்டத்திற்குப் பணம் கூட்டிக்கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சியெடுக்குமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: கனம் உறுப்பினர் அவர்களுடைய இந்த யோசனையை எதிர்காலத்திலே பரிசீலனை செய்யலாம்.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவர் அவர்களே, சிரணிப் பணிகளுக்காகச் செலவழிக்கப்படுகின்ற பணத்திலே ஏதாவது மானியமாக மத்திய அரசு தருகின்றதா? அப்படித் தருவதில்லையென்றல் இனியாவது மத்திய அரசு தர வேண்டுமென்று அரசாங்கம் வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்களுடைய யோசனையும் அரசு நினைவிலேகொண்டு ஆவன செய்ய முயற்சிக்கும்.

தீண்டாமை ஒழிப்பு

* 225 வினு.—திரு. எம். முத்தையா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம் செய்வதற்காக தனியாக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதில் பணியாற்றுபவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:

(அ) இல்லை.

(இ) இவ்வினுவுக்கு இடமில்லை.

திரு. எம். முத்தையா: தலைவர் அவர்களே, தீண்டாமையை ஒழிப்பதற்காகக் குழுக்கள் அமைக்கப்பட்டாலும் வேறு வழிகளிலே தீண்டாமையை ஒழிப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தீண்டாமையை ஒழிப்பதற்குச் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு குழுக்கள், தாலுக்கா வாரியாக ஒரு குழுவும், மாவட்ட வாரியாக ஒரு குழுவும் அமைக்கப்பட்டு அந்தக் குழு பிரச்சாரத்தில் தீவிரமான பங்குகொள்ளும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவர் அவர்களே, இன்று நாட்டிலே கல்வி வேகமாகப் பரவிக்கொண்டிருக்கிறது. தீண்டாமையை அனுசரிக்